2011 ஆகஸ்ட் 30]

68—

கட்டட வசதி

***1413—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி 3–ல் 12 வகுப்பறைகள், ஒரு ஆய்வுக் கூடம், ஒரு கழிவறை யூனிட், குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் ரூபாய் 43.50 இலட்சத்தில் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், இப்பள்ளிக்குக் கூடுதல் அடிப்படை வசதிகள் செய்ய நபார்டின் அடுத்த திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பள்ளிக் கல்வித் துறையில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய எங்கள் அன்னையை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதிக்குட்பட்ட சேந்தநாடு அரசினர் உயர்நிலைப் பள்ளி 2006 ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக பெயரளவில் தரம் உயர்த்திவிட்டு, பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடம் மற்றும் கட்டட வசதி எதையும் கடந்த தி.மு.க. மைனாரிட்டி அரசு ஏற்படுத்தவில்லை. இப்பள்ளியில் சுமார் 1295 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். அதில் +1, +2 வகுப்பில் மட்டும் கிட்டத்தட்ட 274 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் தற்போது 14 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. மாணவ, மாணவியர் பயிலுவதற்கு இட வசதி*

போதுமானதாக இல்லாத காரணத்தினால், அந்த மாணவர்கள் அங்கே இருக்கின்ற மரத்தடி நிழலிலே அமர்ந்து பயின்று வருகின்றார்கள். மேலும் மழைக்காலங்களிலே பார்த்தீர்கள் என்றால் அந்த மாணவர்கள் படிப்பதற்கு இட வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு, கல்வித் துறையில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தித் தந்த, தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறைகொண்டு, வருகின்ற நிதியாண்டிலே நபார்டு வங்கித் திட்டத்தின் மூலமாகவோ அல்லது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலமாகவோ, ஆய்வுக் கூடத்துடன் கூடிய 14 வகுப்பறைகளைக் கொண்ட கூடுதல் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு அரசு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக இருந்தபோது, 2005–2006 ஆம் கல்வியாண்டில், நபார்டு வங்கி திட்டம், பகுதி III–ன்கீழ் 12 வகுப்பறைகள், ஒரு ஆய்வகம், ஒரு கழிப்பறை, குடிநீர் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.43.50 இலட்சத்தில் செய்து தரப்பட்டன. இப்பள்ளிக்கு பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு வகுப்பறை மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 3 வகுப்பறைகள் கட்டித்தரப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இப்பள்ளியில் 1295 மாணவ, மாணவியர் பயில்கின்றனர். தற்போது, 24 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். தற்போது பள்ளிப் பயன்பாட்டிலுள்ள வகுப்பறைகள் 20. பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைப்படி 30 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. மாணவர்களின் நலன் கருதி, கூடுதலாகத் தேவைப்படும் 10 வகுப்பறைகள் கட்டுவதுகுறித்து இந்த ஆண்டு நபார்டு திட்டம், பகுதி XI–ன்கீழ் தேவையின்அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

2011 ஆகஸ்ட் 30]

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டிலே நபார்டு வங்கித் திட்டத்தின் மூலமாக பள்ளிக்கு கட்டடம் கட்டித் தருகிறேன் என்று சொன்னதற்கு தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. மூர்த்தி அவர்கள்.

திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாதவரம் தொகுதியிலே சில பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கிறது. அந்தப் பள்ளிகளுக்குப் பாதுகாப்பாக, பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்குப் பாதுகாப்பாக, சுற்றுச் சுவர் அமைத்துத் தரப்படுமா என்பதோடு, சில பள்ளிகளிலே மாணவர்கள் பயன்படுத்தமுடியாத அளவிற்கு பாழடைந்த நிலையிலே கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றை இடித்து புதிய கட்டடங்கள் கட்டித் தரமுடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது எனது பதிலுரையிலேயே தெரிவித்தேன். கடந்த ஆட்சியிலே பள்ளிகளுக்குத் தேவையான சுற்றுச் சுவர் கட்ட கடந்த ஆண்டு 39,000 சதுர மீட்டர் கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு அம்மா அவர்கள் அனைத்துப் பள்ளிகளிலும் பாதுகாப்பான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்பதற்காக, ஒரே ஆண்டிலே ரூ.105 கோடி செலவில் 3,70,000 சதுர மீட்டர் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுச் சுவர் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–20

எந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால், அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும். மேலும், பள்ளிகளில் சில கட்டடங்கள் இடிந்த நிலையில் உள்ளன என்று சொல்கின்றார். எந்தெந்தப் பள்ளிகளில் அப்படிப்பட்ட ஆபத்தான நிலையில், இடிந்த நிலையில் கட்டடங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், அந்தப் பள்ளிகளுக்குப் புதிதாக வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள், இதுவரை துணை வினா எதுவும் எழுப்பவில்லை. உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. மூர்த்தி, மூலக் கேள்வி கேட்பவருக்குத்தான் இன்னொரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பளிக்கப்படும். உங்களுக்கு ஒரு துணைக் கேள்விதான்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பெருந்தலைவர்களில் ஒப்பற்ற தலைவி, குடும்ப ஆட்சியை ஒழித்து, மக்களாட்சியை மலரச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு பணிவோடு வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, வள்ளிப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளி கடந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. அந்தப் பள்ளிக்குக் கட்டடங்கள் இல்லாமல் மரத்தடியிலே வகுப்புகள் நடத்தப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. வள்ளிப்பட்டு ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி திட்டத்தின்மூலம் கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நபார்டு XI–வது திட்டத்தின்கீழ் 269 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.255.76 கோடி செலவில் கூடுதல்

2011 ஆகஸ்ட் 30]

வகுப்பறைகள், கழிவறைகள், குடிநீர் வசதி, ஆய்வகங்கள் கட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பள்ளிக்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு எனது தொகுதியில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் இதுநாள்வரை செலவு செய்யப்படவில்லை. அந்தப் பணம் வேறு திட்டத்திற்கு மடை திருப்பப்பட்டதா அல்லது கட்டடம் கட்டியதற்கு... (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒதுக்கப்பட்ட பணம் இன்னும் செலவு செய்யப்படாமல் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கட்டடம் கட்டுவது குறித்து கேள்வி எழுப்புங்கள். மானியக் கோரிக்கை விவாதத்தின்போது இவ்வளவு பணம் செலவு செய்திருக்கின்றீர்கள்; ஏன் செலவு செய்யப்படவில்லை என்றெல்லாம் பேசியிருக்கின்றீர்கள். இதிலும் அதையே பேசி இன்னொரு மானியக் கோரிக்கை நேரமாக ஆக்கிவிடாதீர்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே, செல்வி பாலபாரதி அவர்கள் அதிகமான நபர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து கேள்வி நேரத்தையும் மானியக் கோரிக்கை நேரம்போல் செய்துவிடாதீர்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம், நான்காண்டு காலத்திலே கட்டடம் கட்டப்படாமல், அந்தப் பள்ளிக்குக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. அந்தப் பணம் செலவழிக்கப்பட்டதா, இல்லையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போதாவது சிக்களூர், வேடகட்டமடூர் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படவில்லை; அது வேறு எதற்காகவாவது பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார். மூலக் கேள்வி கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படுமா என்பது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு பள்ளியைக் குறிப்பிட்டு, இந்தப் பள்ளிக்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது; இத்தனை ஆண்டுக் காலம் அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை; அந்த நிதி வேறு எதற்காகவாவது ஒதுக்கப்பட்டதா என்ற கேள்விகளைக் கேட்டால் அதற்குப் பதில் சொல்வதற்கு எனக்கு முறையாக இருக்கும். இல்லையெனில், எனக்குத் தனியாக எழுதிக் கொடுத்தால், அது பற்றிய விவரம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, இந்தப் பள்ளியிலே கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு கண்டிப்பாக அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே மொத்தம் 16,075 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற பள்ளிகளுக்கு வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதிகளெல்லாம் செய்து தருவதற்கு ரூ.1,082 கோடி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பள்ளிகளில் வகுப்பறைகள் கட்டுவதற்கு மட்டும் நிதிநிலை அறிக்கையிலே ரூ.498.24 கோடி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதன்மூலம் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 4,444 வகுப்பறைகள் கட்டப்படவிருக்கின்றன. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பள்ளியின் வகுப்பறைகளும் கண்டிப்பாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.

திரு. ப. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 3500 மாணவியர் படிக்கின்றனர். அங்கு

2011 ஆகஸ்ட் 30]

கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3,000—க்கும் அதிகமான மாணவர்கள் இருந்தும் போதுமான வகுப்பறைகள் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்தால் முன்னுரிமையின் அடிப்படையிலே கண்டிப்பாக கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு மட்டுமின்றி, பொதுவாக மாணவ, மாணவியர் என்று சொன்னாலே அள்ளி அள்ளிக் கொடுப்பதில் அளப்பரிய இன்பம் காண்பவர், நாம் வாழுகிற காலத்திலே வாழுகிற வள்ளலாக இருப்பவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவர் கேட்டுக் கொடுப்பவர் வள்ளல், கேட்காமலேயே தேடிச் சென்று கொடுப்பவர் வள்ளலுக்கெல்லாம் வள்ளல். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட வள்ளலுக்கெல்லாம் வள்ளல்தான் இந்த மாநிலத்தில் 3—வது முறையாக முதலமைச்சராக இருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியிலே இருக்கிற புதூர் மேல்நிலைப் பள்ளியின் சுற்றுச் சுவர் இடிந்து கிடக்கிறது. அதைப்போல, அந்தப் பள்ளிக்கு ஓர் அறிவியல் ஆய்வுக் கூடமும் தேவைப்படுகிறது. அதோடு, அந்தப் பள்ளியிலே மிகப் பெரிய விளையாட்டு மைதானமும் இருக்கிறது. சென்னையிலே மைதானம் கிடைப்பது என்பது பெரிய விஷயம். அந்தப் பள்ளியிலே மிகப் பெரிய மைதானம் இருக்கிறது. அது சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கிறது. இவற்றிலெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, என்னுடைய தொகுதியிலே இருக்கிற அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித்

தருவதற்கும், அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டித் தருவதற்கும், விளையாட்டுத் திடலைப் பராமரிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். அதேபோன்று, வகுப்பறைகள் கட்டுவதற்கும் 1,082 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கண்டிப்பாக நிறைவேற்றப்படும். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பள்ளி அரசுப் பள்ளியா அல்லது மாநகராட்சிப் பள்ளியா என்பது தெரியவில்லை. (குறுக்கீடு) உறுப்பினர் அரசுப் பள்ளி என்று கூறுகிறார். அரசுப் பள்ளி என்றால், இந்த ஆண்டே முன்னுரிமை கொடுத்துக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்கள். முதல் துணைக் கேள்வி அவருக்கு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்கள் இதுவரை துணைக் கேள்வி கேட்டதில்லை. அதனால் அவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் நிறைய துணைக் கேள்வி கேட்டுவிட்டீர்கள். உங்களுக்கு அடுத்த முறை வாய்ப்புக் கொடுக்கப்படும்.

திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்று இன்று மாணிக்க மகுடமாக விளங்குகிறார்கள். 5 ஆண்டுக் காலத்தில் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அத்தனை பணிகளையும் 100 நாட்களிலே செய்த புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையான அம்மா அவர்களின் ஆட்சியின்போது செய்யாறு தொகுதியிலே

2011 ஆகஸ்ட் 30]

Mini Stadium *கட்டும் திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். கடந்த மைனாரிட்டி கருணாநிதி ஆட்சியிலே அதைக் கிடப்பிலே போட்டுவிட்டனர். இன்றுவரை அப்படி நிலுவையிலேயே உள்ளதை இப்போது நம் அம்மா அவர்களினுடைய அரசு கட்ட ஆரம்பிக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக முன்னுரிமை அடிப்படையிலே நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

புதிய கட்டடம்

***23—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், குறிச்சியிலுள்ள Q1255 கூட்டுறவு நாணயச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடி தாலுகாவில் உள்ள குறிச்சி என்ற ஊரில் Q1255 குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி தொடக்க